திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, சென்னை விமான நிலையத்திற்கு மீனம்பாக்கம் என்ற பெயர் ஏன் வந்தது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குட்டையிலே மீன் பிடிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, சென்னை விமான நிலையத்தில் சூப்பர்சானிக் போன்ற பெரிய விமானங்கள் வந்திறங்க வசதி இப்பொழுது உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இப்பொழுது வசதி இல்லை. அந்த வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு முயற்சி செய்து வருகிறது.

பாலத்துறை கிராமத்தருகில் அணைக்கட்டு

■ **219. வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை தாலுக்கா, மதுக்கரை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பாலத்துறை கிராமத்தில் அணை கட்டும் வேலை தற்சமயம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாலத்துறை கிராமத்திற்கு அருகே அணைக்கட்டும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால் அக் கிராமத்தில் ரூ. 57,000 செலவில் குட்டை (Pond) ஒன்று அமைக்கும் திட்டத்துக்கு அண்மையில் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, மதுக்கரை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பாலத்துறை கிராமத்தில் அணைக்கட்டு கட்ட 6 இலட்சத்திற்கு மேற்கொண்ட தொகையை ஒதுக்கி அங்கே 1967-ஆம் ஆண்டில் சர்வேயும் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அந்தக் குட்டையைக் கட்டுவதற்காக முடிவு எடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் அங்கே குட்டை கட்டக் கூடாது. எங்களுக்கு அணைக்கட்டு கட்ட வேண்டுமென்று அந்தப் பகுதி விவசாய மக்கள் விண்ணப்பித்துள்ளார்கள். எனவே அங்கே அணைகட்ட அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அங்கேயிருக்கிற மக்கள் மாத்திரமல்ல, நம்முடைய எம்.எல்.ஏ. அவர்களும் வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் பரிசீலிக்கப்பட்டபொழுது குளத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்காததால் கைவிடப்பட்டது. தண்ணீர் இல்லாத இடத்திற்குச் செலவு செய்வது சரி இல்லை என்பதால் சுமார் 140 ஏக்கர் அளவில் 57,000 ரூபாயில் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

Madurai Sourashtra Co-operative Bank

*220 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Deputy Registrar of Co-operative Societies Madurai has issued in 1966 any order to the Sub-Registrar (Consumer Co-operation) to conduct an enquiry under section 65 of the